இந்தக் குடிசைகளில் வாழும் கிறித்துவ மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்த புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து, எப்போது எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை சிதம்பரனார் மாவட்டத்திற்கு என மொத்தம் 3,057 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 1,000 வீடுகள் மீனவர்களுக்கு இலவசமாகக் கட்டித் தருக்கின்றதை மாற்றி, ஆணடு ஒன்றுக்கு 2,000 வீடுகள், ஏறக்குறைய 5 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில், அதுவும் ஒவ்வொரு வீடும் ரூ. 26,000/- செலவில் அந்த வீடுகளை மீனவர்களே கட்டிக் கொள்ளலாம் என்கின்ற ஒரு உத்தரவை, இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் செயல்படுத்தமுடியாத உத்தரவை தமிழகத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்ததன் அடிப்படையிலே மீனவர்களுக்குத் தேவையான வீட்டை அவர்களே கட்டிக் கொள்ள இன்றைக்கு ஒரு புதியத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எவ்வளவு வீடுகள் வேண்டுமானாலும் கட்டித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், மீனவர்கள் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் மூன்று சென்ட் நிலத்தை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அளித்து தீர்மானத்தைப் போட்டு அரசாங்கத்திற்கு வைப்பார்கள் எனில் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமேஷ் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 78, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**78—**

## கதர்த் துணியில் புதிய வடிவமைப்புகள்

**** 87424 டாக்டர் (திருமதி) பீட்ரிக்ஸ் டி' சோசா:***

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1996 பிப்ரவரி 20]*
கதர்த் துணியில் புதிய வடிவமைப்புகளைக் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கதர்த் துணியில் புதிய டிசைன்கள் துறையின் மூலம் தற்போது உருவாக்கப்பட்டது வருகிறது.

**Dr. Beatrix D' Souza:** Hon. Speaker Sir, the present designs in khadi cloth and Khadi furnishings are particularly unaesthetic. Will the Government consider furnishing the weavers with improved designs preferably ethnic and South Indian, to boost the sales inside and outside the State?

*மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:* மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கதர்த் துணியில் புதிய டிசைன்களை உருவாக்குவதற்காக வீவர்ஸ், அதாவது நெசவாளர்களுக்கு ஜக்கார்டு ஆண்டுதோறும் நூறு சதவீகிதம் மானியத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிய டிசைன்களை உருவாக்கி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விற்பனையைப் பெருக்குவதற்காக துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் *79,* திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**79—**

விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம்

*** 20611** திரு. ஆ. சுப்புரத்தினம்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் பற்றி மேலும் சிறப்பான முறையில் மக்கள் மத்தியில் விளம்பரம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?